# குறள் கூறும் மானுடம்

முனைவர் வெ.நிர்மலா,
துறைத் தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக்கல்லூரி,
திருத்தணி-631209, திருவள்ளூர் மாவட்டம்.

85

**ஆய்வுச் சுருக்கம் -**

ஒரு சமுதாயத்திலிருந்து பெறப்பட்ட பண்புநெறிகள் இன்னொரு சமூகத்தை வழிநடத்தும் போது, பண்புநெறிகளை உருவாக்கப்பட்ட சமுதாயம் போற்றுதலுக்குரியதாகவும், பயன்பெறும் சமுதாயம் ஆற்றலுடையதாகவும் விளங்கமுடியும். இப்பண்பாடு இலக்கியமாகப் பிரதிபலிக்கப்படும்போது, இலக்கியச் செழுமையும், அதன் வழி மனிதன் தனக்கான வரலாற்றையும், பண்பாட்டையும் இனங்காண முடிகின்றது. தன்னுடைய பகுத்தறிவினால் நன்மை தீமைகளைக் கண்டு வாழப் பக்குவமடைந்த மனிதன் அறிவின் அசுர வளர்ச்சியினால் அறிவியலின் பிடியிலும், தொழில்நுட்பத்தின் சுழலிலும் சிக்கித் தன்னை விடுவிக்க முடியாமல், இதுதான் வாழ்வென்றெண்ணும் கண்மூடித்தனமான வாழ்வை ஒழுங்குபடுத்தவும், நல்ல பண்பாட்டு நெறிகளைத் தேடி அலையும் மனித சமூகத்திற்குத் திருக்குறள் கூறும் மனித மாண்புகளை அடையாளப்படுத்துவது தேவையான ஒன்றாகும்.

**ஆய்வு முன்னுரை –**

சமுதாயத் தாக்கத்தால் தனி மனித உணர்வினால் உந்தப்பட்டு சமுதாய வாழ்வில் இரண்டறக் கலக்கும் பண்புகள் மனித வளர்ச்சிக்கான வரைமுறைகளாகக் கொண்டனர். இந்தத் தனி மனித உணர்வின் தாக்கம் சமூகத்தில் எல்லோருக்கும் கிடைக்கும்பொழுது அச்சமுதாயத்தை பாதுகாத்து மேன்மையுடன் வழிநடத்திச் செல்லும் உயர்பண்புகளாக அவ்வுணர்வுகள் மாற்றம் பெறுகின்றன. இவ்வுயர் பண்பு நெறிகள் மனித செழுமைக்கு துணை போனதாலும், காலம் கடந்து வாழ்விற்கு கற்பிதங்களைக் கொடுப்பதினாலும் அப்பண்பு நெறிகள் மானுட செழுமைக்கான மாண்புகளாகக் கொள்ள முடிகின்றது. இவ்வுயர் பண்பாட்டு நெறிகள் திருக்குறளின் வழியாக வெளிக்கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச் சொற்கள் -**

அன்பு, அறன், இல்வாழ்க்கை, விருந்தோம்பல், பிறப்பில் சமத்துவம், நீதியில் சமுத்துவம், பொறுமை, நட்பு.

**திருக்குறளில் மனித மாண்புகள் –**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறள் ஏறத்தாழ உலக மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது என்றால் அந்நூலில் உள்ள பல அறங்கள் இன்றைக்கும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆழ்ந்த கருத்துக்களும் இடம் பெற்றிருப்பதே முக்கிய காரணமாகும். மதச் சார்பற்ற மனித சமுதாயத்திற்கு பொதுவாக இந்நூல் பயன்பட்டிருப்பதால்தான் “உலகப் பொதுமறை” என்று குறிப்படப்படும் உயர்வினைப் பெற்று விளங்குகிறது. அதனால்தான் திருக்குறளின் புகழினை,

“அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்

குறுகத் தறித்த குறள்” என ஔவையாரும்

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என பாரதியும்

திருவள்ளுவரைப் பாடி மேலும் சிறப்பு சேர்க்கிறார்கள். மனித சமுதாயம் எவ்வாறெல்லாம் மனித மாண்புகளுடன் வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.

**அன்பு –**

எவரிடத்தும் தன்னலம் கருதாது தூய்மையான அன்பு செலுத்துமிடத்தில் தான் மனித நேயமானது குடிபுகும். தூய அன்பினை அறியும் வாயிலாக,

“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்” (குறள்-71)

என்று வள்ளுவர் கூறுவார். அன்பை மனத்துள் பூட்டிவைக்கவோ, மறைத்து வைக்கவோ முடியாது. தனக்கு அன்பானவர் துன்பப்படும்போது அதனைப் பொறுக்க முடியாமல் அனைவரும் அறியும்படி அழுது, அன்பை வெளிப்படுத்தி விடுவர். இவையே தூய அன்பும், மனித நேயமும் ஆகும். அன்பைக் கொண்டு இயங்கும் உடலே உயிர் நிற்கும் உடலாகும். மற்றவையெல்லாம் எலும்பு, தோல் இவற்றால் போர்;த்தப்பட்ட இயந்திரத்திற்குச் சமமாகும், இதனை,

“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு” (குறள்-80)

என்பதினால் அன்பே மனித மாண்பு என அறிய முடிகின்றது.

**அறன் –**

ஒருவர் வாழ்வில் தருமச் செயல்களே மிகுந்த முன்னேற்றத்தைத் தரும். இயன்றவரை தரும காரியங்களைக் கைவிடாமல் செய்ய வேண்டும். இதனைச் ,

“சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு

ஆக்கம் எவனோ உயிர்க்கு” (குறள் 31)

புகழையும் செல்வத்தையும் தரக்கூடிய தருமத்தைவிட மேலான செல்வம் உலகில் உண்டா என அறத்தின் முக்கியத்துவத்தை வள்ளுவர் உணர்த்துகிறார். நிறைவானதும் முழுமையான அறம் என்று சொல்லக்கூடியதும் எதுவென்றால் மனத்தில் குற்றமில்லாதவராக இருப்பதே ஆகும். இதனை,

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்

ஆகுல நீர பிற” (குறள் 34)

என்று வள்ளுவர் கூறுகிறார். பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல், ஒழித்து நடக்க வேண்டுமென்றும் தீய எண்ணத்தோடு பகட்டுக்காகச் செய்யப்படும் தருமங்கள் ஒரு போதும் அறமாகாது எனவும் அறத்தினை வலியுறுத்துகிறார். பகிர்ந்து கொடுத்தும் பல உயிர்களைக் காப்பாற்றுவதும் அறங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது என்பதனை ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’ என உணர்த்துகிறார்.

**இல்வாழ்க்கை –**

இல்வாழ்க்கையில் ஒருவரையொருவர் அன்புடனும், உதவும் மனப்பான்மையுடனும் நடந்து கொண்டாலே அவ்வில்லறமாது மகிழ்ச்சிக்குரியதாக அமையும். மேலும், சிறப்பாகப் போற்றப்படும் இல்வாழ்க்கையில் பிறர் பழிக்கு அஞ்சி நடந்து இல்லறம் நடத்துவதனை,

"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று" (குறள்-49)

என்கிறார். அன்பு செய்வதும், விட்டுக் கொடுத்து வாழ்வதும் மனித நேய மாண்பு தானே.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள்-45)

என்ற குறள் வழி இதனை அறியலாம்.

**விருந்தோம்பல் –**

தமிழர்களின் உயர்ந்த பண்பாடுகளில் விருந்தோம்பலும் ஒன்று. இத்தகு விருந்தோம்பலின் சிறப்பை, வள்ளுவர்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் 81)

எனக் கூறுகிறார். ஒரு மனிதன் தன் இல்லத்தின்கண் இருக்கிறான் என்றால் அஃது தமது விருந்தினரைப் பேணுவதற்கேயாகும். மேலும், விருந்தினரை உபசரிக்கும் பண்பு குறித்து,

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள் 86)

எனத் திருக்குறள் கூறுகிறது. ஏற்கெனவே தமது வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரித்துவிட்டு, இனி வரப்போகும் புதிய விருந்தினர்க்காகக் காத்திருக்கும் உயரிய பண்பும், மனித நேயமும் உடையவர்கள் தமிழர்கள் என்பது புலனாகிறது. எத்தகைய உயரிய பொருளாயினும் அதனைப் பலரோடு பகிர்ந்துண்ணும் பாங்குடையவர்கள் தமிழர்கள். இதனை,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று" (குறள் 82)

எனக் கூறுகிறார் வள்ளுவர். தனது வீட்டிற்கு வெளியே விருந்தினர்கள் இருக்க அமிழ்தமாயினும் தனித்து உண்ணும் வழக்கம் தமிழர்களிடையே இல்லை. அமிழ்தத்தையும் பலரோடு பகிர்ந்துண்ணும் இயல்பினர் தமிழர்கள். இத்தகைய உயரிய மனித மாண்பு உலகத்தில் காண்பதற்கு அரியதான ஒன்றாகும்.

**பிறப்பில் சமத்துவம் –**

மனித உயிர்கள் அனைத்தும் சமமானவை. சாதியாலோ, மதத்தாலோ, பணத்தினாலோ வேறுபடுத்திக் காண்பது கண்டிக்கப்பட்டதனை,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள் 972)

ஏன வள்ளுவர் கூறுகிறார். பிறப்பினால் சமமான மக்களை, செய்யும் தொழில்களால் உயர்வு, தாழ்வு பாராட்டக்கூடாது.

**நீதியில் சமத்துவம் –**

குற்றம் செய்பவர் யாராக இருந்தாலும் தனக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடில்லாமல் நடுநிலையோடு தீர்ப்பளிப்பதே சரியான நீதிமுறையாகும். இதனை,

“ஓர்ந்து கண்ணோடாது புரிந்து யார்மட்டும்
சேர்ந்து செய்வதே முறை” (குறள் 541)
என்ற குறள், சமத்துவத்தை தழைத்தோங்கச் செய்யும் நடுநிலை நீதியை வலியுறுத்துகிறது.

**பொறுமை –**

அளவுக்கதிகமாக ஒருவர் தமக்குத் தீங்கு செய்தாலும் அதனைப் பொறுப்பதே தமிழர் பண்பாகும். அதுவும் எப்படிப் பொறுக்க வேண்டுமென்றால்,

“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை” (குறள் 151)
ஏன வள்ளுவர் கூறுகிறார். தன்னைத் தோண்டுபவரைத் தாங்கிக் கொண்டிருக்கும் நிலம் போல, தமக்குத் தீங்கு செய்பவரையும் பொறுப்பதும், மன்னிப்பதும் தமிழர்களின் தலையாய பண்பாகும்.

**நட்பு –**

நட்பிற்காக உயிரையே கொடுக்கத் தயங்காதவர்கள் நம் தமிழர்கள். இத்தகைய சிறப்பிற்குரிய நட்பினை, ‘நெஞ்சத்து அகநக நட்பது நட்பு’ (குறள் 786) என்கிறார் வள்ளுவர். முகம் மலருவது மட்டுமல்லாமல் உள்ளமும் மகிழும்படி நட்புக் கொள்வதே உயர்ந்த நட்பாகும் என்கிறார். மேலும், நட்பிற்குரியோர் துன்பப்படும் போது காலம் தாழ்த்தாது சென்று உதவ வேண்டுமென்பதை,

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு” (குறள் 788)
என்று விளம்புகிறார். ஆடை நெகிழும்போது கையானது விரைந்து சென்று சரி செய்வது போல அவ்வளவு விரைவாக நண்பனின் துன்பத்தைப் போக்குவது உயர்ந்த நட்பு மட்டுமல்ல, இதுவே மனித நேயச் செயலும் என்கிறார்.

**ஆய்வு முடிவுரை –**

மனிதர்களுக்கு பெரு மதிப்பும் பெருமானமும் கொண்ட பண்புகள், குணவியல்புகள், நடத்தைகள் அனைத்தையும் மனித மாண்புகள், மனித மேம்பாடுகள் என்கிறோம். மனித வாழ்க்கையை மேம்பாடடையச் செய்பவை மனித மாண்புகள். அவை மனித குலத்திற்கு உரிமையானவை. எனவே, ஒவ்வொரு மனிதனாலும் அவை பேணப்பட வேண்டியவை. மனித மாண்புகள் வளர்க்கப்பட்டு, பேணப்பட்டு வாழ்க்கையில் அவற்றை மேற்கொண்டு வாழும்போது தான் மனித வாழ்க்கை சேமமுறும். சீரும் சிறப்பும் பெறும். இன்பமும் மகிழ்ச்சியும் பொங்க மனித வாழ்க்கை செம்மையும் பசுமையும் வாய்ந்ததாக விளங்கும். உலகியல் தேவைகளுடன் மனிதனின்; ஆன்மீக தேவைகளும் நிறைவு செய்யப்படும் பட்சத்திலேயே மனிதன் நிறைவான வாழ்வினைப் பெற முடியும்.

அரிய, பெரிய கருத்துக்கள் அடங்கிய குறளினை ஒரு குறிப்பிட்ட தலைப்பிற்குள் அடக்கி எழுதுவதென்பது முடியாததாகும். ‘கனியிருப்பக் காய் கவர்ந்தற்று’ என்பதற்கேற்ப இனிமை தரக் கூடியதும் பயனுள்ளதும், வாழ்வின் சிறப்புக்களை உணர்த்தக் கூடியதுமான பல இலக்கியங்கள் நம் மொழியில் இருக்கும் பொழுது அந்நிய மொழி நூல்களை மொழிபெயர்ப்பு என்ற பெயரில் எழுதி, காலத்தை வீணாக்குவதை விட்டு, நம் தமிழ் மொழியில் உள்ள திருக்குறள் போன்ற தன்னிகரில்லாத நூல்கள் கூறும்

வாழ்வியல் கருத்துக்களை நம் சந்ததியினர்க்கு எடுத்துக் கூறி வழிநடத்துவதில் முனைப்புடன் செயல்படுவோம்.

**தொகுப்புரை -**

மனித மாண்புகளை உணர்த்துவதன் நோக்கமே, மனிதர்களை நன்னடத்தை உள்ளவர்கள் ஆக்குவதே. நன்னடத்தையாளர்களே மண்ணுயிர் ஓம்புகின்ற பண்பைப் பெறுவர். எனவே தான் ‘பண்புடையார்ப் பட்டுண்டுலகம்’ என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

இவ்வுலகம் இன்றுவரை நிலைத்து நிற்கிறது என்றால், நன்னடத்தை உள்ளோர் ஒரு சிலராவது இருப்பதே காரணம். ‘நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை’ என்ற ஔவையாரின் வாக்கினையும் ஈன்று நோக்கற்பாலது.

பணிவு, உண்மை பேசுதல், அன்பு, அறன், இல்வாழ்க்கை, விருந்தோம்பல், பிறப்பில் சமத்துவம், நீதியில் சமுத்துவம், பொறுமை, நட்பு என்பன நன்னடத்தை பண்புகளில் சில. மனித குலத்திற்கே அவை உரிமையானவை. மகிழ்ச்சியும், திருப்தியும், நிறைவும் உள்ள வாழ்வு நன்னடத்தை உள்ளோர்க்கே கிடைக்கின்றது.

அன்பு உலகின் மாபெரும் ஆற்றலாகும். அன்பினால் ஆகாதது எதுவுமில்லை. அன்பினாலேயே சேவை பண்பு ஓங்குகின்றது. மனித உறவுகள் மாண்பு பெறுகின்றன. சமூகத்தில் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு ஒரே வழி அன்பு வழி. உலகின் சமயங்கள் யாவும் அன்பு மார்க்கத்தை வற்புறுத்துவதில் ஒத்த நிலைப்பாட்டினைக் கொண்டு விளங்குகின்றன.

மனித மாண்புகள் நமக்கு பெரும் பாதுகாப்பினை அளிக்கின்றன. எனவே, மனித மாண்புகளை உணர்பவர்கள், பிறருக்கு உணர்த்துபவர்கள், பேணுபவர்கள் யாவரும் சமுதாயத்திற்கு பெரும் பணி செய்தவர்கள் ஆவர்.

**சான்றெண் விளக்கம் -**

திருக்குறள், நல்லாமூர் முனைவர் கோ.பெரியண்ணன், பதிப்பு ஆண்டு 2021 வனிதா பதிப்பகம், எண்.11, நானா தெரு, தி.நகர், சென்னை-600017.

திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதி;ப்புக்கழகம், திருநெல்வேலி-6 பதிப்பு ஆண்டு 1964, கழக வெளியீடு.

பூவை அமுதன் திருக்குறள் எளிய தெளிவுரையுடன் கவிதா பதிப்பகம், ஒன்பதாம் பதிப்பு, 2014.

புலியூர்க்கேசிகன், திருக்குறள் புதிய உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, பிப்ரவரி 2009.